Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 742/2025 PW-8**

Name : ஐய்யப்பன்
Father / Husband name : செங்கேணி
Village : அகூர்
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.06.2026

Accused 1 to 3 present. Defence counsel present. APP absent. Witness identified by VM Pettai PS PS HC 1967 Tr.Selvam.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விவசாய வேலை செய்துவருகிறேன். அ.சா.5 ஏழுமலை என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் காலை சுமார் 11 மணியளவில் நான் அகூர் மெயின்ரோட்டில் நின்றிருந்தபோது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய போலிசார் வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், நான் செய்துகொடுத்தேன். என்னுடன் மணிகண்டன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**நீதிமன்ற கேள்வி** - யார் வீட்டின் அருகே போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் அகூர் மெயின் ரோட்டிலுள்ள எனது வீட்டின் அருகே கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்யும்போது ஏழுமலை என்னுடன் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. போலிசார் வரைபடம் வரைந்தார்களா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.